பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

15 08 2022 **MONDAY** 6 45 **AM**

வணக்கம். ஆல் இண்டியா ரேடியோ சென்னை - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நாட்டின் 76வது சுதந்திர தினம் இன்று நாடுமுழுவதும் எழுச்சியுடன் கொண்டாடப்படுகிறது.
- தில்லியில் வரலாற்றுச் சிறப்புமிக்க செங்கோட்டையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தேசியக் கொடியை ஏற்றி வைத்து நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.
- மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் முதலமைச்சர்களும், மாவட்ட தலைநகரங்களில் ஆட்சியர்களும் தேசியக்கொடியை ஏற்றிவைக்கவுள்ளனர்.
- கடந்த சில ஆண்டுகளாக நாடு பல்வேறு துறைகளில் சாதனை படைத்து வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.
- சென்னை துறைமுகத்தில் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாக கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்பானந்தா சோனாவால் கூறியுள்ளார்.

>>>><<<<

நாட்டின் 76வது சுதந்திர தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனை முன்னிட்டு தில்லியில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க செங்கோட்டையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்னும் சற்று நேரத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.

தேசியக்கொடி ஏற்றியவுடன், இந்திய விமானப் படையின் பேண்டு வாத்தியக் குழுவினர் தேசியக்கீதத்தை இசைக்கவுள்ளனர்.

தேசியக்கொடி ஏற்றப்படும் போது, 21 குண்டுகள் முழங்க மரியாதை செலுத்தப்படும்.

அப்போது, **MI-17** ரக ஹெலிகாப்டர்கள் வானில் தாழப் பறந்து, மலர்களை தூவவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பிரதமர் தனது உரையை நிறைவு செய்தவுடன், தேசிய மாணவர் படைப் பிரிவைச் சேர்ந்தவர்கள் தேசியக் கீதத்தை இசைக்கவுள்ளனர்.

76வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, தில்லி செங்கோட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மெட்ரோ ரயில் நிலையங்கள் உள்ளிட்ட இடங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் 76வது சுதந்திர தினம் தேசப்பற்றுடனும், எழுச்சியுடனும் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யபப்பட்டுள்ளன.

சென்னை, தலைமைச் செயலகத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க கோட்டை கொத்தளத்தில் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றவுள்ளார்.

முன்னதாக, பாதுகாப்புப் படையினரின் அணிவகுப்பு மரியாதையை முதலமைச்சர் ஏற்றுக்கொள்கிறார்.

முதலமைச்சர் உரையாற்றிய பின்னர், தகைசால் தமிழர் விருது, டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் விருது, துணிவு மற்றும் சாகச செயல்களுக்கான கல்பனா சாவ்லா விருது, முதலமைச்சரின் நல்ஆளுமை விருதுகள் வழங்கப்படவுள்ளன.

மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக அரும்பணியாற்றியோர் மற்றும் வேலைவாய்ப்பு வழங்கிய நிறுவனங்களுக்கும் விருதுகளை முதலமைச்சர் வழங்கவுள்ளார்.

>>>><<<<

கடந்த சில ஆண்டுகளாக நாடு பல்வேறு துறைகளில் சாதனை படைத்து வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

நாட்டின் 76 வது சுதந்திர தினம் கொண்டாடப்படுவதை ஒட்டி, நாட்டு மக்களுக்கு நேற்று உரையாற்றிய அவர், சுதந்திரம் என்பது ஜனநாயகத்தின் மிகப் பெரிய வெற்றியின் அடையாளம் குடியரசுத் தெரிவித்துள்ளார்.

இந்நாளின் அடையாளமாக மக்களின் இல்லங்களில் மூவண்ண தேசியக் கொடி பறந்து கொண்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக கூறினார்.

நாட்டின் விடுதலைக்காக போராடிய தியாகிகளை இந்நாளில் நினைவு கூர்வதாக குறிப்பிட்ட குடியரசுத் தலைவர், சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் பழங்குடியின மக்களின் பங்கு மகத்தானது என்று தெரிவித்தார்.

நாட்டின் பண்பாடும் கலாச்சாரமும் மனிதாபிமானத்தையும், சமத்துவத்தையும் அடிப்படையாக கொண்டது என்றும் இந்த உணர்வுகளை ஆன்மீகவாதிகளும், சிந்தனையாளர்களும் தொன்றுதொட்டு நமது உள்ளத்தில் பதியவைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தேசப்பிதா மகாத்மா காந்தி உள்ளிட்ட தலைவர்கள் நவீன இந்தியாவிற்கு ஏற்ற வகையில், நமது பண்டைய கலாச்சாரத்திற்கு புதிய வடிவத்தை உருவாக்கி தந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆட்சி அதிகாரத்தை மக்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற தத்துவத்தை தேசப்பிதா நமக்கு உணர்த்தினார் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் ஜனநாயகம் இந்திய மக்களின் பண்பாட்டையும் ஒழுக்கத்தையும் அடிப்படையாக கொண்டது என்றும் திருமதி. திரௌபதி முர்மு சுட்டிக்காட்டினார்.

நாட்டிற்காக தியாகம் செய்த தலைவர்கள் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர்களை தேசம் என்றும் மறக்காது என்று கூறிய அவர், அவர்களின் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்யும் பொறுப்பு நமக்கு உள்ளதாக குறிப்பிட்டார்.

2047ஆம் ஆண்டு நாட்டின், நூற்றாண்டு சுதந்திர விழாவை கொண்டாடும் வேளையில், சுதந்திரப் போராட்ட தியாகிகளின் கனவுகளை நாம் நனவாக்கி, சாதனை படைக்க வேண்டும் என்றும் திருமதி. திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டார்.

>>>><<<<

நாட்டின் பொருளாதாரத்திற்கு உத்வேகம் அளிக்கும் வகையில், நாம் கட்டமைத்துள்ள தற்சார்பு இந்தியா இயக்கம், இந்த இலக்கை எட்டுவதற்கான திறனை அளிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

கோவிட் பெருந்தொற்றினால் ஒட்டுமொத்த உலகமுமே பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானபோது, இந்தியா விரைவான பொருளாதார வளர்ச்சியை பதிவு செய்ததாகவும், இதனால் ஏழை எளிய மக்களின் வாழ்க்கை பாதுகாக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

புதிய இந்தியாவை உருவாக்குவதில் இளைஞர்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், டிஜிட்டல் உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு அவர்கள் அழைத்து செல்வார்கள் என்றும் குடியரசுத் தலைவர் கூறினார்.

ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில், பிரதமரின் வீட்டுவசதி திட்டம், அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டம் போன்றவை அமைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இயற்கை வளங்களான மலைகள், காடுகள், விலங்குகள், பறவைகள் நீர்ஆதாரங்கள் உள்ளிட்டவற்றை பாதுகாக்க வேண்டும் என்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் சவால்களை உறுதியோடு எதிர்கொண்டு, எழில்மிகு இந்தியாவை உருவாக்க வேண்டும் என்றும் திருமதி. திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டார்.

>>>><<<<

76-வது சுதந்திர தினம் கொண்டாடப்படுவதை ஒட்டி, ராணுவம் மற்றும் துணை ராணுவப் படைகளில் வீர, தீர செயல்கள் புரிந்தவர்களுக்கு வழங்கப்படும் நாட்டின் உயரிய விருதான கீர்த்தி சக்ரா, சவுரிய சக்ரா உள்ளிட்ட விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நாட்டின் உயரிய விருதான கீர்த்தி சக்ரா 3 பேருக்கும், சவுரிய சக்ரா விருது 13 பேருக்கும் வழங்கப்படுகிறது.

மேலும், 81 சேனா விருதுகள் உள்ளிட்ட 107 பேருக்கு விருதுகள் வழங்கப்படும் என்று குடியரசுத் தலைவர் அறிவித்துள்ளார்.

>>>><<<<

75-வது ஆண்டு சுதந்திர திருநாள் அமுதப் பெருவிழாவை ஒட்டி நாட்டு மக்கள் அனைவருக்கும் தமிழக ஆளுநர் திரு. ஆர் என் ரவி தமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டுள்ளார்.

இந்த தருணத்தில் நாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட எண்ணற்ற சுதந்திரப் போராட்ட வீரர்களுகளின் தியாகத்திற்கு தலைவணங்குவதாகவும் கூறியுள்ளார்.

நமது ராணுவம், துணை ராணுவம் காவல்துறை, புலனாய்வு அமைப்புகள், பாதுகாப்புத்துறை விஞ்ஞானிகள், விண்வெளி மற்றும் இணையதள கண்காணிப்பு உள்ளிட்ட துறைகளில் சிறப்பாக செயல்பட்டு நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்த அனைவருக்கும் இந்நாளில் தமது பாரட்டுக்களை தெரிவிப்பதாக தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக், காமன்வெல்த், செஸ் ஒலிம்பியாட் போட்டிகளில் தமிழகத்திற்கு பெருமை தேடித்தந்த விளையாட்டு வீரர்களுக்கு தமது பாராட்டுக்களை ஆளுநர் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

>>>><<<<

உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், தேசியக்கொடி ஏற்றுவதை உறுதி செய்ய மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் ஒரு பகுதியாக, தலைமைச்செயலர் திரு. இறையன்பு, திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஆத்துப்பாக்கம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நேற்று நேரில் ஆய்வு செய்தார்.

தலைமைச்செயலர் முன்னிலையில் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. அமிர்தம் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார்.

பின்னர் தேசியக்கொடிகளை, உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களுக்கு தலைமைச் செயலர் வழங்கினார்.

>>>><<<<

சுதந்திர தினத்தை முன்னிட்டு, அனைத்து கிராம ஊராட்சிகளிலும், இன்று கிராமசபைக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஊராட்சி பொது நிதி கணக்கு விவரம், குடிநீரை சிக்கனமாக பயன்படுத்துதல், டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் ஒழிப்பு நடவடிக்கையை தீவிரப்படுத்துவது குறித்தும், நீர்நிலைகளை பாதுகாப்பது குறித்தும் கிராமசபைக் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

>>>><<<<

சென்னை துறைமுகத்தில் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாக கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்பானந்தா சோனாவால் கூறியுள்ளார்

சென்னை துறைமுகத்தில் நேற்று உயரதிகாரிகளுடன் ஆய்வு செய்த பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர், சென்னை துறைமுகம் மட்டுமல்லாமல், பாரதீப், விசாகப்பட்டிணம் ஆகிய துறைமுகங்களிலும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

சீன ஆராய்ச்சிக் கப்பல், அம்பன்தோட்டா துறைமுகத்தில் நின்று செல்வதற்கு இலங்கை அனுமதி அளித்துள்ளது குறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு, எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ள இந்தியா தயாராக இருப்பதாக அமைச்சர் கூறினார்.

>>>><<<<

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் இன்று ஓரிரு இடங்களில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

இருவரிச் செய்திகள்

எகிப்தில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 41-ஆக அதிகரித்துள்ளது.

>>>><<<<

ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, ஈரானுக்கான தூதரை குவைத் நியமித்துள்ளது.

>>>><<<<

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு, இந்தியா உதவிசெய்வது மகிழ்ச்சி அளிப்பதாக காமன்வெல்த் கூட்டமைப்பின் பொதுச் செயலர் திரு. பாட்ரிஷியா தெரிவித்துள்ளார்.

>>>><<<<

இந்திய கடற்படையின் **Satpura** கப்பல், வடஅமெரிக்காவின் சாண்டியாகோ துறைமுகத்திற்கு நல்லெண்ணப் பயணமாக சென்றுள்ளது.

>>>><<<<

ஜம்மு காஷ்மீர் மாநிலம், பாரமுல்லா மாவட்டத்தில் பட்டான் என்ற இடத்தில் 108 அடி உயர கொடிக்கம்பத்தில் ராணுவத்தினர் தேசியக் கொடியை ஏற்றவுள்ளனர்.

>>>><<<<

இந்திய கடற்படையின் துணைத்தளபதி அட்மிரல் **Satish Ghormade** இலங்கை தலைநகர் கொழும்புவில் இன்று அந்நாட்டு கடற்படைக்கு **Dornier** விமானத்தை வழங்கவுள்ளார்.

>>>><<<<

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் காலியாக உள்ள மேலாளர், உதவியாளர் உள்ளிட்ட பல்வேறு பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக மாநில அரசு அறிவித்துள்ளது.

>>>><<<<

சென்னையில் தனியார் வங்கியில் நிகழ்ந்த கொள்ளைச் சம்பவத்தில் தொடர்புடைய 3 பேரை காவல்துறையினர் கைது செய்து, அவர்களிடமிருந்து 15 கிலோ தங்கத்தை மீட்டுள்ளனர்.

>>>><<<<

சென்னையில் நடைபெற்ற மூன்றாவது மாநில ரேங்கிங் டேபிள் டென்னிஸ்போட்டியின், ஆடவர் பிரிவில் வருணும், மகளிர் பிரிவில் தீபிகாவும் பட்டம் வென்றனர்.

ஆடவர் பிரிவு இறுதியாட்டத்தில் வருண், 11-5, 11-7, 6-11, 11-8, 11-5 என்ற கணக்கில் **SRMST** அணியில் அபினவ்-வை வென்றார்.

மகளிர் பிரிவு இறுதிப் போட்டியில் தீபிகா 11-5, 11-9, 9-11, 7-11, 11-3, 11-6 என்ற செட்கணக்கில் **ICF** அணியின் யாஷினியை வென்றார்.

**>>>><<<<**